# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 16 புதன்கிழமை 02.10.2024 கதிர் 375







# தமிழ் மக்களுக்கு அனுதாபம் வேண்டாம் இந்த நாட்டில் நியாயம்தான் வேண்டும்!

## அநுரவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்கிறார் மனோ கணேசன்



வெற்றி பெற்று பதவி ஏற்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயகவுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். அரசியல் குரோதங்கள், கட்சி வேறுபாடுகள் இன்றி பொறுப்புள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியாக, தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாம் செயற்படுவோம். நீங்கள் உறுதி அளித்த, உயிர்த்த ஞாயிறு படுகொலை சூத்திரதாரிகளை கண்டறிந்து தண்டனை வழங்குவது, ஊழல் ஒழிப்பு, வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நாட்டின் சொத்துகளை மீட்பது, மத்திய வங்கி பிணை முறி கொள்ளையரை தண்டிப்பது, சிவராம், நடேசன், எகனிலியகொட, லசந்த உட்பட ஊடகவியலாளர் கொலைதாரிகளை கண்டறிந்து தண்டனை வழங்குவது ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் இரு கரங்களை உயர்த்தி ஆதரவு வழங்குவோம்.

6➤

## கொழும்பு மனித புதைகுழியில் எட்டு எலும்புக்கூடுகள் மீட்பு

கொழும்பு துறைமுகப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சியில் எட்டு மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அகழ்வாராய்ச்சியை மேற்பார்வையிடும் ஆலோசகரான சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.

இவற்றில் இரண்டு எலும்புக்கூடுகள் ஏற்கனவே தோண்டி எடுக்கப்பட்டு தற்போது பொலிஸ் பாதுகாப்பில் பாதுகாக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் சோமதேவ தெரிவித்தார்.

மூன்றாவது கட்ட அகழாய்வு அக்டோபர் 17ஆம் திகதி தொடங்கவுள்ளது.

எச்சங்களின் தோற்றம் மற்றும் சூழல் பற்றிய கூடுதல் தகவல்களைக் கண்டறிய அதிகாரிகள் தொடர்ந்து கண்டுபிடிப்புகளை ஆராய்ந்து வருகின்றனர்.

இந்த பாரிய புதைகுழி தொடர்பான அகழ்வு மற்றும் விசாரணைகள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி சுனில் ஹேவகே மற்றும் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியல் ராஜ் சோமதேவ ஆகியோரின் தலைமையில் இடம்பெற்று வருகின்றன.

கொழும்பு துறைமுகத்திற்குச் செல்லும் புதிய அதிவேக வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக நிலத்தை தோண்டும் போது கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ள பழைய செயலக வளாகத்தில் முதன்முறையாக மனித எலும்புகள் ஜூலை மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவிக் கப்பட்டதையடுத்து, நீதவான் பண்டார இலங்கசிங்க முன்னிலையில் 2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் திகதி வியாழக்கிழமை குறித்த இடத்தில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

## ஒரே நாளில் 7 நாடுகளின் தூதுவர்களை சந்தித்துப் பேசிய ஜனாதிபதி அநுர

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 7 நாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளுடன் இன்றைய தினத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அனைத்து நாடுகளுடனும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையின்பிரகாரம், வெளிநாட்டு தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடினார்.



இதன்படி, கியூபா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், கனடா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினார்.

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வை கோரி தூதரகத்தை முற்றுகையிட திட்டம்

### பா.ம.க. அன்புமணி ராமதாஸ் அறிவிப்பு



இலங்கை சிறைகளில் வாடும்162 மீனவர்களையும் அவர்களின் படகுகளுடன் விடுதலை செய்ய வேண்டும் இலங்கையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ள 192 படகுகளையும் விடுவிக்க வேண்டும்என்று இலங்கை அரசையும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க மத்திய, மாநில அரசுகளையும் வலியுறுத்தி எதிர்வரும் செவ்வாய்க் கிழமை 8 ஆம் திகதி சென்னையில் பாமக சார்பில் இலங்கை துணைத்தூ தரக முற்றுகைப்போராட்டம்நடைபெறும் என அக்கட்சித் தலைவர் அன்புமணி ராமதாஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், “வங்கக்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களின்மீதான இலங்கை கடற்படையினரின் அத்துமீறலும், அடக்குமுறைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. பாரம்பரிய கடல் பகுதியில் தமிழக மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமையை உறுதி செய்ய வேண்டும் என்று ஒட்டுமொத்த தமிழகமும் வலியுறுத்தி வரும் போதிலும்அதை இலங்கை அரசு மதிக்க மறுப்பது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

எனவே, இலங்கை சிறைகளில் வாடும் 162 மீனவர்களையும் அவர்களின் படகுகளுடன் விடுதலை செய்ய வேண்டும் இலங்கையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ள 192 படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்று இலங்கை அரசையும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க மத்திய, மாநில அரசுகளையும் வலியுறுத்தி எதிர்வரும் செவ்வாய்க் கிழமை சென்னையில் பாமக சார்பில் இலங்கை துணைத்தூதரக முற்றுகைப்போராட்டம் நடைபெறவுள்ளது.

## கட்சி மாறினார் ரொஷான் ரணசிங்க!

முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க, திலித் ஜயவீர தலைமையிலான மவ்பிம ஜனதாக கட்சியில் இணைந்துள்ளார். அக்கட்சியின் தவிசாளர் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அக்கட்சியின் உப தவிசாளர் பதவிக்காக முன்னாள் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக மிலான் ஜயதிலவும் மவ்பிம ஜனதாக் கட்சியில் இணைந்துகொண்டுள்ளார். அவருக்கு கம்பஹா மாவட்ட அமைப்பாளரார் பதவி வழங்கப்பட்டுள்ளது.

# திருநெல்வேலியில் விவசாய கண்காட்சி வடக்கு ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்








விவசாயத்தை காலநிலைக்கு ஏற்ப கொண்டு செல்வதுடன் விவசாய உற்பத்திகளை விற்பனை செய்கின்ற பொழுது இடைத்தரகர்களின் தலையீட்டைக் கட்டுப்படுத்தி விவசாயிகளுக்கு உற்பத்திக்கேற்ப லாபம் கிடைப்பதற்கு வழிவகை செய்ய முயற்சி செய்ய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் தெரிவித்தார்.

இன்றைய தினம் திருநெல்வேலி விவசாய கண்காட்சியினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது இதனைக் குறிப்பிட்டார்.

வட மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில், "சூழல்நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி," எனும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சி யாழ்ப்பாணம் செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில், இன்று இடம்பெற்றது.

மூன்று நாட்கள் இடம்பெற உள்ள குறித்த கண்காட்சியினை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் இன்று ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது இயற்கை விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறுதானியங்கள், பயிர் உற்பத்திகள் உள்ளிட்ட பல்வேறு வகையான விவசாய செயல்முறைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் விவசாய நிறுவனங்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

# தமிழ்க் கட்சிகள் தனிவழி எனில் நாமும் ஒரு முடிவை எடுப்போம்

## அம்பாறை சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கை

(வி.ரி. சகாதேவராஜா)

தமிழ் அரசியல் கட் சிகள் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இருப்பு நலன் பற்றிய சிந்தனை இன்றி ஏதாவது தனிவழி தீர்மானங்களை எடுப்பார்களாக இருந்தால், நிச்சயமாக கல்முனைத் தொகுதி மக்கள் மாத்திரமல்லாமல் இந்த மாவட்ட ஒட்டுமொத்த தமிழ் மக்களும் தமிழ் அரசியல் பரப்பிலிருந்து அகன்று வேறு ஒரு முடிவை இந்த தேர்தல் களத்தில் எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

இவ்வாறு அம்பாறை மாவட்ட சமூக ஆர்வலர்களும்,பொதுமக்களும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனை சேனைக்குடியிருப்பு தமிழ்வாணன் மண்டபத்தில் இடம்பெற்ற மக்கள் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடைபெறவிருக்கின்ற பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலான மக்கள் சந்திப்பு கடந்த 01 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த மக்கள் சந்திப்பு தொடர்பாக பொதுவான ஒரு அழைப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டது .அந்த அழைப்பு அறிவித்தலில் கல்முனை பிராந்தியத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் இருக்கக்கூடிய தமிழ் மக்கள் நலன் சார்ந்து சிந்திக்கக் கூடியவர்கள்மற்றும்விசேடமாக கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்டு காணப்படுகின்ற பொது அமைப்புகள், ஆலய நிருவாகங்கள், இளைஞர் கழக நிருவாகங்கள், விளையாட்டுக் கழக நிருவாகங்கள், கிராம அபிவிருந்து சங்கங்க நிருவாகங்கள், மற்றும் தமிழ் தேசியப் பரப்பில் உள்ள அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்ட சுமார் 60 பேர் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்த சந்திப்பில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள் சார்பில் பொதுமக்கள் தமது கருத்துக்கள் கோரிக்கைகளையும் முன்வைத்து பேசி இருந்ததோடு அரசியல் கட்சி பிரமுகர்களும் தங்கள் கட்சி நிலைபாடுகள் பற்றி பேசி இருந் தனர்.

பொதுமக்கள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் தரப்பிலே தமிழ் அரசியல் பரப்பில் இருக்கின்ற அனைத்து கட்சிகளும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு இந்த முறை தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை ஏகமனதாக முன்வைக்கப்பட்டது.

இருந்தாலும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடைய பதில் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் திருப்திப்படுகின்ற வகையில் அமைந்திருக்கவில்லை. அதாவது ஒன்றுபட்டு வருவதற்கான சாத்தியப்பாடுகள் அற்ற கருத்துக்களை தான் அவர்கள் பெரும்பாலும் வெளியிட்டிருந்தார்கள்.

அதனால் அவர்களுக்கு நாளை வரை கால அவகாசம் பொதுமக்களால் வழங்கப்பட்டது.

அதேவேளை ஒன்றுபட்டு ஒரு சின்னத்தில் போட்டியிட முன் வராத பட்சத்தில் கல்முனைத் தொகுதி பொதுமக்கள் தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளுக்கு அப்பால் சென்று தேர்தலுக்கான ஆதரவை தனிவழி யில் வழங்குவது என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டு இருப்பதோடு இந்த முடிவு பொத்துவில் தொகுதி, சம்மாந்துறை தொகுதி போன்ற தொகுதிகளுக்கும் சென்று அந்த தொகுதி மக்களோடும் பேசி மாவட்ட ரீதியான முடிவு ஒன்று இறுதியாக எடுக்கப்படும் என்றும் ஒரு நிலைப்பாட்டை ஊடகங்களுக்கும், அம்பாரை மாவட்ட மக்களுக்கும்,அறியத் தருகிறோம் என்று ஏற்பாட்டுக்குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

# திருமலையிலும் 3 குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

*திருகோணமலை மாவட்டத்தில் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக மூன்று சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாவட்ட ஆணையாளருமான சர்மிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.*

*சுயேச்சைக் குழுக்கள் உதவி ஆணையர் ஆர். சசிலன் மேற்பார்வையில், பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணத்தை செய்தனர்.*

*ஒரு குழுவில் ஏழு பேர் இருக்க வேண்டும் எனவும், ஒவ்வொரு குழுவும் 14000 ஷரூபாவை வைப்பிலிட வேண்டும் எனவும் மாவட்ட தேர்தல் அதிகாரி மேலும் தெரிவித்தார்.*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# மகாத்மா காந்தியின் பிறந்தநாள் நிகழ்வுகள்







மகாத்மா காந்தியின் 155 வது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வின்போது யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில்இந்திய துணைத்தூதர்சாய் முரளி, வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி,யாழ் மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் யருள் மற்றும் சமய சமூக பிரதிநிதிகள், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்க பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது காந்தீயம் ஏடு வெளியிட்டு வைக்கப்பட்டு அதன் பிரதி அனைவருக்கும் வழங்கி வைக்கப்பட்டது. இதேவேளை இந்திய துணைத் தூதரக அதிகாரிகளால் துவிச்சக்கர வண்டி பவனியொன்றும் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் மரநடுகையும் இடம்பெற்றது






# மிதி வெடி

போன கிழமை மிதிவெடி, கடும் வெடி தான் பாருங்கோ.... பொது நூலக பொதுக் கழிப்பறை பொது மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுட்டுது. போதாக்குறைக்குத் தானா வந்து தலையக் குடுக்கிற மாதிரி அதிகாரி ஒருவர் கடுமையான விளக்கம் தந்திருக்கிறார். தன்னைத் தான் நான் சொன்னனான் எண்டும், தானக்கும் நான் சொன்ன விசயங்களுக்கும் சம்மந்தமே இல்லை எண்டு சத்தியம் பண்ணுறார்.

அவர் எழுதியிருக்கிற “ஒப்புதல் வாக்குமூலத்தை” அப்பிடியே போட்டு, அதுக்கான எங்கட விளக்கத்தையும் வரப்போற கிழமையளில போடுறதுக்கு இருக்கிறன். தகவல் அறியும் சட்டம் உட்பட ஊடக அணுகுமுறைகளூடாகப் பெறப்பட்ட ஆவணங்களை அப்பிடியே வெளியிடலாம் எண்டு இருக்கிறன். சடுதியா நாட்டில ஏற்பட்ட மாற்றமும், வடக்கை ஆளுறவர் அலுவலகத்தில ஏற்பட்ட மாற்றமும் சில ஆதாரங்களை ஆவண ரீதியா எடுக்கிறதில சிறு தாமதம். அதனால..... எத்தினை தரம் இடமாற்றக் கடிதம் வந்தது? எங்கை-யெங்க வந்தது? ஆராராலை இரத்துச் செய்யப்பட்டது எண்டெல்லாம் - அதுகளைப்பற்றி விலாவாரியா வாற கிழமை கதைப்பம்...

கந்தரோடைப் பக்கம் காணி ஒண்டு விக்கக் கிடக்காம் எண்டு பார்க்கப் போனான்... அங்க போய்ப் பாத்தாத் தான் தெரியும் அது எனக்கு சரியாப் பரிச்சயப்பட்ட ஒரு ஆளிண்ட காணி.... எனக்கு மட்டுமில்ல எல்லாருக்கும் பரிச்சயப்பட்ட ஆள் தான் பாருங்கோ அவர்.

அவர் ஒரு முன்னாள் எம்.பி..... பேரன்... பூட்டன் எண்டு பரம்பரையாச் சேத்து வைச்ச காணியள்... தகப்பன் தன்ர காலத்தில வஞ்சகமில்லாமல் அள்ளித் தெளிச்சுப் போட்டு போய்ச் சேர்ந்திட்டார். கல்விக் கல்லூரி எண்டும், குடிமனை, கோயில், குளமெண்டும் அந்தாள் குடுத்த காணிகளுக்குள்ள தான் இப்ப கனக்கத் “தர்ம”ப் பணிகள் நடக்குது. தன்ர வாரிசுக்கெண்டு விட்டுட்டுப் போன சொத்துகளில பெரும்பாலானதை வித்துச் சுட்டுத் தான் பிள்ளை அரசியல் செய்ததாம். போன முறை “எலக்ஷன்” செலவுக்காக ஒரு பெரிய காணியை வித்துப் போட்டுத் தான் செலவு செய்தவராம். தனக்கு மட்டுமில்ல: தன்ர “கத்துக்குட்டி” அரசியல் வாரிசுக்கும் காணி வித்த காசில இவர் தான் செலவழிச்சவராம்.

குடும்பத்துக்கெண்டு இருக்கிறது போக “எக்ஸ்ரா” சொத்துப் பத்துகளில இப்ப இருக்கிற ஒரேயொரு காணியை வித்து இந்த முறை “எலக்ஷன்” செலவைப் பாப்பம் எண்டு யோசிக்கிறாராம்.... இதில வேடிக்கை என்னவெண்டா எந்தக் கட்சியில “எலக்ஷன்” கேக்கிறது எண்டு இன்னும் இவருக்கே தெரியாதாம்....

போன முறை கூட்டமைப்பில கேட்டவர்.... அப்பர் செய்த அறப்பணியள் இன்னும் அந்தப் பகுதிச் சனத்திண்ட மனத்தில நிக்கிறபடியா... இந்தாளுக்குக் கிடைச்ச வாக்குகளோட, கட்சியின்ர மொத்த வாக்கு எண்ணிக்கைக்கு ஏற்ற போல இந்தாளுக்கு “சீற்” கிடைச்சுட்டு.....

இந்த முறை ரெண்டு பிரச்சினை..... ஒண்டு கூட்டமைப்பு.. சிதைஞ்சு சி-ன்னாபின்னமாப் போய்க் கிடக்குது.... ரெண்டாவது யாழ்ப்பாணத்துக்கான “சீற்” எண்ணிக்கை ஒண்டு குறைஞ்சுட்டுது.... கூட்டாக் கேட்டாலே மட்டுமட்டா கிடைக்கிற ஆக்கள் இவை. தனிச்சு நிண்டு என்னத்தைக் கிழிக்கப் போகினம்? அதால இந்த முறை இந்தாளுக்கு “ரிக்கற்” கிடைக்கிறதே சந்தேகம் எண்ட நிலமையில... இருக்கிறதையும் வித்துப் போட்டு இந்தாள் என்ன செய்யப் போகுது எண்டு கூட நிக்கிறவை புறுபுறுக்கினம்.... முந்தி “ரகுபதி ராகவ... ரராஜாராம்.... எண்டு பாடிக் கொண்டு ஒருத்தர் இருந்தார், நல்லது கெட்டதைச் சொல்லுறதுக்கு... அந்தாள் போனதுக்குப் பிறகு, இப்ப ஆர் மணி கட்டுறது எண்டு தெரியாமல் கூடநிக்கிறவ முழிச்சுக்கொண்டு நிக்கிறதால... அண்ணேற்ற ஆர் சொல்லுறது எண்டு யோசிக்கினம் போல.... காணி வாங்க எண்டு வாறவையிட்ட சொல்லிச் சொல்லித் திருப்பி அனுப்பாமல்... நேரடியா அவரிட்டையே சொல்லிற்றியள் எண்டால் “காணி விக்கிறதுக்கில்லை” எண்டு ஒரே மறுமொழியாச் சொல்லிப் போடலாம் பாருங்கோ....

கூட்டமைப்பில கூட்டா இருந்து வெளிக்கிட்டு வந்த ஒருத்தற்ற கதை இப்பிடி எண்டா... மற்றவர் இன்னும் பாவமுங்கோ.... ரெண்டு பேருக்குமே தனிச்சுத் தங்கட கட்சியளில நிண்டு வெல்லுறதுக்குத் திராணி இல்லப் பாருங்கோ.... “சொல்லுறவன் சொன்னால்... கேக்கிறவனுக்கு மதி எங்க பே-ானது...” எண்டுமாப் போல உசுப்பேத்தி விட வெளியில வந்து போட்டு, இப்ப “எலக்ஷன்” எண்டோண்ண ஆரோட கூட்டுச் சேரலாம் எண்டு “அடைக்கலம்” தேடித் திரியினம் பாருங்கோ..... எங்கட அரசியலை வெளிநாட்டு முதலைகள் தீர்மானிக்க வெளிக்கிடுகினம் எண்ட கதையள் கேள்விப்பட்டிருப்பியள்.... அப்பிடி ஒரு முதலையார்... தமிழ்ப்படக் கதையில வாற மாதிரி அரசியல் செய்ய வெளிக்கிட்டிருக்கிறாராம்... அவற்றை அரசியல் கூ(த்)ட்டுக்கு இவர் தான் இணைப்பாளராம்..... அங்கையும், இங்கையுமா அதிருப்தியில இருக்கிற அரசியல்வாதிகளைக் கூட்டுச் சேர்த்து புதுக் கூட்டணி போட்டு “எலக்ஷன்”க்கு இறக்கிறது தான் இவையின்ர திட்டமாம்.... இதுக்கு “ஒருவன்” துணை நிற்பான் எண்டு நம்புகினமாம்.......

ஒருத்தர் காட்டின வழியால ஒன்றாகப் பயணிச்ச காலமெல்லாம் 2009 ஓட முடிஞ்சுது பாருங்கோ.... கூட்டா நிண்டே கோமாளிக் கூத்தாடுகினம்.... தனிச்சுப் போய்.... என்னவோ செய்யுங்கோ.... என்ன நடக்குதெண்டு பொறுத்திருந்து பாக்கிறம்.....

நரமுனி

# தேசிய மட்ட கராத்தே போட்டியில் வெண்கலம் வென்ற அனந்தினி



மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தர பெண்கள் பாடசாலையின் மாணவி சரவணன் அனந்தினி தேசிய மட்டத்தில் இரத்தினபுரியில் இடம்பெற்ற ஆகக்கூடிய எடையான (73 கிலோவிற்கு மேல் ) 18 -20 வயதுப் பிரிவின் கீழ் கராத்தே தைக்குண்டோ எனும் காலால் மட்டும் தாக்கும் விளையாட்டில் வெண்கல பதக்கத்தை பெற்று இந்த போட்டியில் பாடசாலை வரலாற்றில் முதல் தடைவை பங்குபற்றி சாதனை படைத்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற கிழக்கு மாகாணத்திற்கான இந்த போட்டியில் பங்குபற்றி மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவான இவர் கடந்த 28 தொடக்கம் 30ம் திகதிவரை இரத்தினபுரியில் இடம்பெற்ற தேசிய மட்ட போட்டியில் கலந்து கொண்டு 3ம் இடத்தை பெற்று வெண்கல பதக்கத்தை சுவீகரித்தார்.

இவர் மட்டக்களப்பு எஸ்.கே.ஓ. கராத்தே கழகத்தைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர்களான கே.ரி.பிரகாஸ், க.குகதாசன், வி.விமல்ராஜ், கணேசலிங்கம் ஆகியோரின் மாணவியான இவரை நேற்றைய தினம் பாடசாலை சமூகம் நினைவு கேடயம் வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தக்கது





# ஒந்தாச்சிமட கடற்கரையில் சிறுவர் தின கொண்டாட்டம்

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் ஒந்தாச்சிமடம் கிராம சமூக அமைப்புகளுடன் இணைந்து சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு ஏற்பாடு செய்த “சிறுவர் மகிழ்ச்சி கூடல்” நிகழ்வானது (2024.10.01) பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில்ஒந்தாச்சிமடம் கடற்கரை திடலில் இடம்பெற்றது.

‘பிள்ளைகளை பாதுகாப்போம், சமமாக நடாத்துவோம்’ எனும் தொனிப்பொருளின் கீழ்கொண்டாடப்படும்இவ்வருடத்திற்கான சிறுவர் தின நிகழ்வில் சிறுவர்களுக்கான பல நிகழ்வுகள் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் சிறுவர் மற்றும் மகளீர் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் போது ஐம்பதிற்கும் அதிக மான பட்டங்கள் சிறுவர்களினால் வடிவமைக்கப்பட்டு பறக்கவிடப்பட்டதுடன், சிறுவர்களுக்கான பாரம்பரிய விளை யாட்டுக்கள், ஆடல், பாடல் மற்றும் ஓவியம் வரைதல் என்பனவும் இடம்பெற்றிருந்தது.

பிரதேச சிறுவர்கள் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டிருந்த இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், ஒந்தாச்சிமடம் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூர்த்தி சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.






# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் டெங்கு ஒழிப்பு குழு கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் டெங்கு குழுக் கூட்டமானது மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் அவர்களின் தலைமையில் இன்று02.10.2024 மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மாவட்ட தொற்றுநோயியல் வைத்திய அதிகாரி னுச.க.றஞ்சன் அவர்களால் டெங்கு நோய்தாக்கம் மற்றும் மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் விளக்க மளித்தார்.

வடகீழ் பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளவேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

மாவட்டத்தின் அடை யாள ப்படுத்தப்பட்டுள்ள முக்கிய இடங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டன.

இத்தனைவிட மாவட்டத்தில் கடந்த காலங்களில் டெங்கு பரவிய விதம், டெங்குவை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் மழைக்காலம் காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயமுள்ள பகுதிகளை கண்டறிந்து வாராந்த முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பது பற்றியும் பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர்(காணி) சுகாதார திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், பொலிஸ் இராணுவ அதிகாரிகள் மற்றும் துறைசார்ந்த திணைகளங்களின் அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.113



# பாலமுனையில் சிறுவர் தின விழாவும் மாணவர்கள் கௌரவிப்பும்

(நவாஸ்)

பாலமுனை அல் - ஹிதாயா மகளிர் கல்லூரியில் உலக சிறுவர் தின விழாவும் மற்றும் இம்முறை க.பொ.த.சா.தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிப்பு நிகழ்வும் அதிபர் முஹாஜ ிரீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கலந்து சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக ஆக்கபூர்வமான தெளிவுரைகளை நிகழ்த்தினார்.

மேலும் இந்நிகழ்வில் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.சியாத் மற்றும் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் ஆசிரிய மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் சர்வதேச சிறுவர் தின கொண்டாட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக சிறுவர் தினத்தையொட்டி, கல்முனை வலையத்தைக்குட்பட்ட பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வுகள், அதிபர் ஏ.அருண்குமார் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# “அநுர ஒரு நாள் அரசாள்வான்“ என்று 6 ஆவது மாதமே சொன்ன ஜோதிடர்

## நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் ஜனாதிபதியின் தாயார்





“எனது மகன் அநுர குமார திசாநாயக்கவை 12 வயதிலேயே புத்த துறவியாக்குவதற்காக துறவறத்துக்கு அனுப்புமாறு சொல்லியதை நான் ஏன் ஏற்கவில்லை” என இலங்கையின் புதிய அதிபரின் தாயார் சீலாவதி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடமத்திய மாகாணத்தின் தலைநகரமான அநுராதபுரத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள விவசாய கிராமமான தம்புத்தேகம எனும் பகுதியில் ஒரு சிறிய ஆஸ்பெட்டாஸ் கூரையினாலான வீட்டில் அதிபர் அநுர குமார திசாநாயக்கவின் தாயார் டி.எம். சீலாவதி (86) தனது மகள் ஸ்ரீயலதாவுடன் (62) வசித்து வருகிறார்.

இலங்கையின் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இளம் பருவம் பற்றி தாயார் சீலாவதி அளித்த பேட்டி ஒன்றில் கூறியது: “எனது மகனுக்கு சிறுவயதில் காற்றில் பட்டங்களை பறக்க விட மிகவும் பிடிக்கும். தினமும் அருகிலுள்ள நீச்சல் குளத்திற்கு சென்று நீச்சலடிக்கவும் பிடிக்கும். அநுரவுக்கு எப்போதும் புத்தகங்களை வாசிப்பது மிகவும் பிடிக்கும்.

வீட்டின் எதிரே இருந்த மரத்தின் கிளையில் அமர்ந்து சப்தமாக படித்து கொண்டிருப்பது இன்னும் நினைவில் எனக்கு இருக்கிறது. சாப்பிடும் போதும் புத்தகமோ செய்தித்தாளோ வாசித்துக் கொண்டே சாப்பிடுவது அநுரவின் வழக்கமாக இருந்தது.

அநுர கல்லூரியில் படிக்கும்போது அரசியலில் ஆர்வம் ஏற்பட்டது. அப்போது அவருக்கு கொலை மிரட்டலும் வந்தது. அவர் நெருங்கிய தொடர்பிலிருந்த அவரது சிறிய தந்தையார் (தந்தையின் சகோதரர்) கொலை செய்யப்பட்டார். அநுர தலைமறைவாக இருந்த காலத்தில் 1992-ம் ஆண்டு அவரது அப்பா இறந்துபோது, அவரது இறுதிச் சடங்கில் கூட கலந்து கொள்ள முடியவில்லை.

12 வயதிருக்கும்போது புத்த விகாரை ஒன்றின் தலைமை குரு ஒருவர், அநுரவை துறவ றத்துக்கு அனுப்புமாறு கேட்டார். அதனை நான் மறுத்து விட்டேன்.

அநுர பிறந்து ஆறாம் மாதத்தில் அவரது ஜாதகத்தை ஒரு ஜோதிடரிடம் காட்டியபோது, ’உங்கள் மகன் ஒரு நாள் அரசாள்வான்’ என்று அதிர்ச்சியோடு சொன்னார். எனது மகன் சாதாரண குடும்பத்திலிருந்து இன்று ஜனாதிபதியாகி உள்ளார். அவர் பொய் சொல்பவரோ, மோசடி செய்பவரோ கிடையாது. அவருக்காக அனுராதபுரத்தில் உள்ள ஆலங்களில் எனது மகனுக்காக பிரார்த்திக்க வேண்டும்” என தெரிவித்தார்.

சகோதரி ஸ்ரீயலதா கூறும்போது, “எனது தாயார் தினமும் இரவு தொலைக்காட்சியில் செய்திகளை பார்க்கிறார். செய்தியில் எனது சகோதரன் வரும்போதெல்லாம் என் மகனா என கேட்பார். மகனுடன் இருக்க அவர் விரும்புவார். என் சகோதரன் அநுரவும் இந்தப் பகுதிக்கு வரும்பொதெல்லாம் எங்களை பார்க்க வீட்டுக்கு வருவார். அவர் இந்த நாட்டின் இந்த பகுதிக்கு வரும்போதெல்லாம், எங்களை சந்திக்கிறார். தேர்தல் பிரச்சாரத்தின்போது, அநுர காரில் தூங்கியதுதான் அதிகம். அவரது பதவியேற்பு ஆரவாரமின்றி நடைபெற்றது. அவர் ஆடம்பரத்தை விரும்ப மாட்டார்” என தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள அநுராதபுரம் மாவட்டம் தம்புத்தேகம எனும் பகுதியில் 24.11.1968-ல் அநுர குமார திசாநாயக்க பிறந்தார். தனது பள்ளி படிப்பினை தம்புத்தேகவில் உள்ள கமினி மகா வித்யாலயா பள்ளியிலும், தம்புத்தேகம மத்திய கல்லூரி மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்றார். 1988-ம் வருடம் இடதுசாரிக் கட்சியான தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி)யில் இணைந்தார். 1995-ம் ஆண்டு அதன் மாணவர் அமைப்பின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். (6ஆம் பக்கம் பார்க்க...)



# அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்கள் மீது நடவடிக்கை

திருத்தப்பட்ட பஸ் கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்களுக்கு எதிராக இன்று முதல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்கள் குறித்து பயணிகள் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு இயக்கப்படும் மாகாணங்களுக்கு இடையேயான தனியார் பஸ்கள் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தொலைபேசி இலக்கம் 1955 அல்லது வாட்ஸ் ஆப் இலக்கம் 071 25 95 555 இற்கு பயணிகள் முறைப்பாடுகளை அளிக்கலாம்.

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் மற்றும் மாகாண பஸ் சேவை வழங்குநர்கள் தொடர்பான சம்பந்தப்பட்ட மாகாண அதிகார சபைக்கு 1958 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நவோமி ஜயவர்தன தெரிவித்தார்.

## தமிழ்மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி அநுர சகோதரரே, தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மலையக தமிழருக்கும், ஈழத்தமிழருக்கும் இனிமேல் இந்நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், இன்று ஐக்கிய மக்கள் கூட்டணி மத்திய நிலையத்தில் நடை பெற்ற ஊடக சந்திப்பில் கூறினார்.

ரஞ்சித் மத்தும்பண்டார, டலஸ் அலஹபெரும, சம்பிக்க ரணவக்க, தயாசிறி ஜயசேகர, கபீர் ஹசிம், நிசாம் காரியப்பர் ஆகியோர் கலந்து கொண்ட ஊடக சந்திப்பில் மனோ கணேசன் மேலும் கூறியதாவது

இந்நாட்டில் 200 வருடங்கள் வாழ்ந்து விட்ட மலையக பெருந்தோட்ட மக்களுக்கு ஒரு அங்குலம் நிலம்கூட இல்லை என அனுதாபப்பட்டு நீங்கள் தேர்தலுக்கு முன் பேசிய ஊடக காணொளியை கண்டேன். மலையக மக்களுக்கு வீடு கட்டி கொள்ளவும், வாழ்வாதார தேவைகளுக்காகவும் காணி வழங்குங்கள். காணி உரிமை வழங்கி அவர்களை இலங்கை தேசிய நீரோட்டத்துக்கள் கொண்டு வாருங்கள். உங்கள் "சிஸ்டம் சேஞ்" என்ற முறை மாற்றத்தை பெருந்தோட்ட துறையில் ஆரம்பித்து, நமது மக்களை பெருந்தோட்ட தொழிலில் பங்காளி ஆக்குங்கள். வடக்கு கிழக்கு ஈழத்தமிழ் சகோதரர்கள் பற்றியும் நீங்களும், உங்கள் கட்சியாளர்களும் அனுதாபப்பட்டு பேசி உள்ளதை கண்ணுற்றேன். ஆகவே அரசியல் கைதிகளை விடுவியுங்கள். இப்போதுதான் யுத்தம் இல்லையே? ஆகவே விடுக்கப்படாத அனைத்து தனியார் காணிகளையும் உடன் விடுவியுங்கள். காணாமல் போனார் பற்றி பேசி உள்ளீர்கள். அவர்களின் குடும்பத்தவருக்கு நியாயம் வழங்குங்கள். உடனடியாக அங்கே மாகாணசபை தேர்தல்களை நடத்துங்கள். மாகாணசபை தேர்தல்களை நடத்தும்படி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டு, கேட்டு நான் அலுத்தே போய் விட்டேன்.

ஆகவே, ஜனாதிபதி அனுர சகோதரரே, தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மலையக தமிழருக்கும், ஈழத்தமிழருக்கும் இனிமேல் இந்நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும்

நேற்று முதல் நாள் நடைபெற்ற சர்வதேச குழந்தைகள் தினத்தன்று, வவுனியாவில் ஜனநாயக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த வலிந்து காணாமல் போன உறவு தாய்மார்களை, "தான் அநுரவின் ஆள்" என்று கூறி ஒரு காடையர் மிரட்டி உள்ளார். "இனிமேல் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை செய்ய விட மாட்டோம்" எனவும் கூறி உள்ளார். இதை கூறி நான் அரசியல் நோக்கில் உங்களை ஒருபோதும் குற்றம் சாட்டவில்லை. ஆனால், உங்கள் பெயரை பகிரங்கமாக பயன்படுத்தி, பெண்களை மிரட்டி, பயமுறுத்தியுள்ள இந்த நபரை உடனடியாக கைது செய்யுங்கள்.

திருடர்களை பிடிக்க, கைது செய்ய, புதிய சட்டங்கள் கொண்டு வர, இருக்கும் சட்டங்களை திருத்த, வெளிநாட்டுக்கு தப்பி ஓடியவர்களை மீண்டும் இந்நாட்டுக்கு கொண்டு வர, அவ்வவ் நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்ய நாம் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளோம். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம். நாடாளுமன்றத்துக்கு பதில் சொல்லும் நிறைவேற்று ஜனாதிபதியா அல்லது முழுமையாக இதை ஒழிப்பதா என அது பற்றி அமர்ந்து பேசுவோம். அதற்கும் முழு அதரவு தருவோம்.

இன்று உங்கள் ஆலோசகர்கள் இருவரும், மத்திய வங்கி ஆளுனரும், நிதி அமைச்சு செயலாளரும் சர்வதேச நாணய நிதியுடன் பேச போகிறார்கள். நல்ல விடயம். நாட்டின் நிதி நிலைமை உடைந்து நொறுங்கிய அன்று, நாம்தான் சர்வதேச நாணய நிதியிடம் செல்ல வேண்டும் என்று முதன் முதலில் பாராளுமன்றத்தில் கூறினோம். அப்போது பிற்காலத்தில் ரணிலுடன் இருந்த மொட்டு கட்சியினர் எம்மை எதிர்த்து கூச்சல் எழுப்பினார்கள். அது உங்களுக்கு தெரியும். இன்று சர்வதேச நாணய நிதியுடன் நீங்கள் பேசுகிறீர்கள். வரவேற்கிறோம். இது தொடர்பில் உங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கவும் நாம் தயாராக உள்ளோம்.

வாக்கு எண்ணிகையில் அதிகம் பெற்றதால் அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதி ஆகியுள்ளார். இரண்டாம் இடத்துக்கு சஜித் வந்துள்ளார். ஆனால் அநுர குமார திசாநாயக்க 50 விகிதம் வாக்குகள் பெறவில்லை. ஆகவேதான் மூன்றாம் இடத்தை பெற்றவர் முதல் அனைவரது வாக்கு சீட்டுகளிலும் இருந்த இரண்டாம், மூன்றாம் வாக்குகள் எண்ண பட்டன.

ஆகவே மூன்றாம் இடம் பெற்ற சிலிண்டருக்கு, இனி அரசியல் ரீதியாக இடம் இல்லை. எதிர் கட்சியான சிலிண்டருக்கு வாக்களித்தவர்கள், எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் எமக்கு வாக்களிக்க வேண்டும். நாம் பொறுப்புள்ள நாடாளுமன்ற அரசாங்கமாக செயற்படுவோம். நாடு இன்னமும் வாங்குரோத்து நிலையில்தான் இருக்கிறது. மொத்த கடன் தொகை கூடி உள்ளது. மொத்த வட்டி தொகையும் கூடி உள்ளது. ஆகவே நாம் அனைவரும் சேர்ந்து நாட்டை கட்டி எழுப்ப வேண்டும். நாம் பொறுப்புடன் கூட்டாக நாட்டை கட்டி எழுப்புவோம். இவ்வாறு மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.







# அநுர ஒரு நாள் அரசாள்வான

2000-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் மூலம் முதன்முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக ஆனார். 2004-ம் ஆண்டு அப்போதைய கூட்டணி ஆட்சியில் விவசாய அமைச்சராக அநுர குமார திசாநாயக்க பதவி வகித்தார். 2014-ஆம் ஆண்டு ஜேவிபியின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். 2019-ம் ஆண்டு நடைபெற்ற எட்டாவது அதிபர் தேர்தலில் போட்டியிட்ட அநுர குமார திசாநாயக்க 418,553 வாக்குகள் பெற்று மூன்றாம் இடத்தை பிடித்தார்.

தொடர்ந்து இலங்கையில் ஊழலுக்கு எதிராக அநுர குமார திசாநாயக்க குரல் கொடுத்து வந்தார். மேலும், இலங்கையில் 2022-ம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது நடைபெற்ற போராட்டங்களில் முன்னின்று நடத்தியதில் அநுர குமார திசாநாயக்க முன்னணி வகித்ததும் குறிப்பிடத்தக்கது. (இந்து)

# நள்ளிரவு முதல் இஸ்ரேலை தாக்கிய ஈரானின் அதி நவீன ஏவுகணைகள்

## O தகுந்த பதிலடி கிடைக்கும் என இஸ்ரேல் எச்சரிக்கை
## O மத்திய கிழக்கில் தீவிரமடையும் போர்ப் பதற்றநிலை

இஸ்ரேலை நோக்கி ஈரான் நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை வீசிய நிலையில், இதற்கான விலையை அந்த நாடு கொடுக்கும் என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

பாலஸ்தீனத்தின் காசா, லெபனான் மீதான தாக்குதல்கள், ஹிஸ்புல்லா தலைவர்கள் படுகொலை உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் நேற்று நள்ளிரவில் இஸ்ரேல் மீதான ஏவுகணை தாக்குதலை தொடங்கியது ஈரான். நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை இஸ்ரேலின் டெல் அவிவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை நோக்கி ஈரான் ஏவியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது. உடனடியாக பொதுமக்களுக்கு சைரன் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டு அவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லும் பணிகளை அந்நாட்டு அரசு முடுக்கி விட்டது.

இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகள் வீசப்பட்டுள்ளன. இஸ்ரேலியர்கள் விழிப்புடன் இருக்கவும், அரசின் உத்தரவுகளை சரியான முறையில் பின்பற்றவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இஸ்ரேல் குடிமக்களைப் பாதுகாக்க தேவையான அனைத்தையும் இஸ்ரேல் ராணுவம் செய்து வருகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த தாக்குதலுக்கான பின்விளைவுகளை ஈரான் சந்திக்க நேரிடும் என்றும், இதற்கான பதிலடி சரியான நேரத்தில் சரியான இடத்தில் கொடுக்கப்படும் என்றும் இஸ்ரேல் ராணுவம் எச்சரித்துள்ளது. மேலும், ஏவுகணைகள் பலவற்றை இஸ்ரேல் விமானப்படை வழியிலேயே தாக்கி அழித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலை நோக்கி வரும் ஏவுகணைகளை வழியிலேயே தடுத்து வீழ்த்துமாறு அமெரிக்க ராணுவத்துக்கு அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார். மேலும், இதற்கான பதிலடி எவ்வாறு இருக்கும் என்பது குறித்து இஸ்ரேல் பிரதமருடன் ஆலோசிக்க இருப்பதாகவும், இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் முழு ஆதரவு இஸ்ரேலுக்கு உண்டு என்றும் பைடன் தெரிவித்துள்ளார்.

ஈரானின் இந்த தாக்குதலைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "ஈரான் மிகப் பெரிய தவறை செய்துவிட்டது. இதற்கான விலையை அந்த நாடு கொடுக்கும். முன்னதாக யாஃபா பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டிலும் தெஹ்ரானின் (ஈரான் தலைநகர்) தலையீடு இருக்கிறது. நம்மை தற்காத்துக் கொள்ளும் நம்முடைய உறுதியை ஈரான் புரிந்து கொள்ளவில்லை. இஸ்ரேலை நோக்கி ஈரான் நூற்றுக் கணக்கான ஏவுகணைகளை வீசியுள்ளது. ஆனால் அவர்களின் இந்த தாக்குதல் தோல்வியடைந்து விட்டது. உலகிலேயே அதிநவீன தொழில் நுட்பங்களைக் கொண்ட இஸ்ரேல் விமானப் படையால் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டது. அமெரிக்காவின் ஆதரவுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

லெபனான், காசா உள்ளிட்ட எல்லா இடங்களிலும் தீய சக்திகளுடன் நாங்கள் சண்டையிட்டுக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய வீரர்கள் அங்கு தீவிரமாக களமாடி வருகின்றனர். முன்னெப்போதையும் விட அயத்துல்லாவின் இருண்ட ஆட்சிக்கு எதிராக உலக சமூகம் இஸ்ரேலுடன் ஒன்றிணைய வேண்டும்" என்று நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

**பின்புலம் என்ன?**

லெபனானின் ஹிஸ்புல்லா ஆயுதக் குழு இயக்கம், பாலஸ்தீனத்தின் காசா பகுதியை சேர்ந்த ஹமாஸ் ஆயுதக் குழு அமைப்பு ஆகியவை ஈரானின் உறுதுணையுடன் செயல்படுகின்றன. கடந்த ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி இஸ்ரேல் நகரங்களை குறிவைத்து ஹமாஸ் இயக்கத்தினர் தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக காசாவில் ஹமாஸ் மீது இஸ்ரேல் ராணுவம் கடும் தாக்குதல் நடத்தியது. இந்தச் சூழலில், ஹமாஸ/க்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கத்தினர், இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து தொடர் தாக்குதல் நடத்தி வந்தனர். இருதரப்புக்கும் இடையே கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக தீவிர போர் நடைபெற்றது. இதில் லெபனானில் 1,100 பேரும், இஸ்ரேலில் 165 பேரும் உயிரிழந்தனர். கடந்த ஜூலை 30-ம் தேதி இஸ்ரேல் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் 2-ம் நிலை தலைவர் புவாட்ஷூகர் உயிரிழந்தார். கடந்த செப்டம்பர் 17-ம் தேதி ஹிஸ்புல்லா இயக்கத்தினர் பயன்படுத்திய 5,000-க்கும் மேற்பட்ட பேஜர்கள் வெடித்துச் சிதறின. கடந்த 27-ம் தேதி லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேல் விமானப் படை நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து, ஹிஸ்புல்லா இயக்கத்தை முழுமையாக அழிக்கும் விதமாக, லெபனான் மீது நேரடியாக போர் தொடுக்க இஸ்ரேல் ராணுவம் முடிவு செய்தது. அதன்படி, தெற்கு லெபனான் எல்லை பகுதியில் தரைவழி தாக்குதலை தொடங்கியதாக இஸ்ரேல் அறிவித்தது. 100-க்கும் மேற்பட்ட இஸ்ரேல் பீரங்கிகள் லெபனான் எல்லைக்குள் நுழைந்து, ஹிஸ்புல்லா முகாம்களை தரைமட்டமாக்கி வருவதாக இஸ்ரேல் தரப்பு தெரிவித்தது.

இதற்கிடையே, "லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் கட்டமைப்புகளை அழிப்பது காலத்தின் கட்டாயம். இந்த விவகாரத்தில் ஈரான் தலையிட கூடாது. இஸ்ரேல் மீது ஈரான் நேரடியாக தாக்குதல் நடத்தினால் மிக கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்" என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்தது. இதனை ஏற்க மறுத்த ஈரான் தற்போது இஸ்ரேல் மீது நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை செலுத்தி தாக்குதல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# கோப்பாயில் சிறப்புற நடைபெற்ற கலாசாலை நிறுவிய நாள் விழா









கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கலாசாலை தின விழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலக்க்ஷ்மி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவரும் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளருமாகிய ஜமுனா ராஜசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

கலாசாலை நிறுவுவதற்கு நிலத்தை வழங்கிய சேர் பொன் இராமநாதனை கௌரவப்படுத்தும்வகையில் இராமநாதன் நினைவுப் பேருரை இடம்பெற்றது

“ஆசிரிய கல்வியியலா ளர்களின் தத்துவ ஆராய்ச்சிப் பட் டங்கள் தொடர்பில் மேற்கிளம்பும் சவால்களும் அவற்றை தாண்டிப் பயணித்தலும்” என்ற பொருளில் யாழ்ப்பாணப் பல் கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரை ஆற்றினார். கலாசாலையில் உள்ள சிவன் ஆலயப் பிரதம குரு சிவசிறீ பா. செல்வசேனக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் முன்னாள் அதிபர், விரிவுரையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.10.2024இல் வெளியிடப்பெற்றது.